

# கந்த சஷ்டி விரதமும்
# கந்த புராணக் கருவும்

செ. சொர்ணலிங்கம் 06.11.1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

உலகத்தாரிடம் இயல்பாகவே அமைந்த அறியாமை என்னும் இருளை அவ்வப்போது இறைவன் தனது ஞான ஒளியை வீச்சி அகற்றுவான். இந்த வகையில் அறியாமையின் தன்மையைப் பொறுத்து, அந்தந்த சமூகத்தவர் நம்பிக்கைக்கு ஏற்ற, தனது பதவிகளை அடைந்த மெய்யடியார்களை வெறு வேறு பல்லுருவினராகப் புவிக்கு ஏவி உபதேசம் செய்வித்தும் வாழ்வித்தும் காட்டுவிப்பன். அத்துடன் தானே தன் சக்தியுடன் சேர்ந்து யோனிவாய்ப்படாத உருவும் கொள்வன். "வேறு வேறுருவும் வேறு வேறியற்கையும் நூறு நூறாயிரம் இயல்பினதாகி ஏறுடையீசன் இப்புவனியை உய்யக் கூறுடை மங்கையும் தானும் வந்தருளி" என்பது மணிவாசகம். "அருளுரு உயிர்களுக்கென்றே ஆக்கினன் அசிந்தன்" என்பது சித்தியார். சிந்தனைக்கு எட்டாதவன் அசிந்தன். பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு மக்கள் இயல்புக்கேற்ப அவன் பக்குவான்மாக்களைப் பிறப்பித்து உய்ய வழிவகுப்பது – பொது நோக்கான கருணை. சகல மதங்களும் சில அடிப்படைக் கோட்பாடுகளை (பஞ்சமா பாதகங்களைக் கடிதலை, உயிர்களிடத்து அன்பு செலுத்தலை) கொண்டிருப்பது பொது. அவை பின்பற்றப்பட வேண்டியவையே. ஆயினும், உயிர்களின் முடிந்த முடிவான முத்திப்பேறு என்கின்ற இலட்சியத்தையும், உயிர், உலகு, பதி என்பவற்றின் வரைவிலக்கணங்களையும் அவற்றின் தன்மைகளையும், பயனையும் உற்று நோக்கினால் இவற்றிற்குப் பூரண – நுட்பமான – திருப்தியான – தர்க்க ரீதியான விடையை சைவம் மட்டுமே கூறுகின்றது. இத்தகு விளக்கம் கொண்ட கொள்கை சைவசித்தாந்தம் எனப்படும். அதன் அந்தமான, மாற்ற முடியாத, வாதிட்டு ஏலவே நிலை நிறுத்திய தத்துவத்தை G. U. போப் முதலாம் பல மேலை நாட்டு அறிஞர் கூட பல தசாப்தங்களின் முன்னரேயே ஏற்றுப் போற்றியுள்ளார்கள். இந்துமதம் – சிறப்பாக சைவம் பிறநாடுகளிலும் இயல்பாகவே செழிப்பதை இன்றும் காண்கின்றோம். அது ஒன்றே சைவ சித்தாந்த உயர்வுக்கு சாட்சி.

ஆதலின் சைவர்களாக, சைவ தேசத்தில், சைவ சமுதாயத்தில், கந்தபுராண கலாச் சாரத்தில் பிறந்த நாம் அதை விட்டு விலகல் அதர்மம். தர்மம் என்பது "எது எது எவ்வாறு தோன்றிற்றோ அது அது அவ்வாறு தத்தம் இயல்பில் பிறழாது இருத்தல்" என்பதாகும். சைவராகத் தோன்றியோர், அறநெறிப்படி – நாவலர் காட்டிய வழிப்படி ஆசாரமாய்த் தீட்சை பெற்று, அதனால் சமய கிரியை – அனுட்டானம் செய்யத் தகுதி பெற்றவராய் வாழ்ந்து சிவனடி சேரல் அவர்தம் இயல்பான தர்மம் – அதாவது கடமை. அன்றேல் அவர் வேற்று நாட்டில் வேற்று மதத்தில் பிறந்திருந்தால் நாவலர் போன்றோர் வாக்கு அவர் தம்மைக் கட்டுப்படுத்தாது. அவர்கள் அற நூல்களில் உள்ளவற்றை அடியொற்றிக் கூறும் பொது இலக்கணங்களாவன: கொல்லாமை, புலால் உண்ணாமை, கள்ளாமை, பிறர்மனை நயவாமை, வரைவில் மகளிர் நயவாமை, இரக்கம், பொறுமை, அடக்கம், கொடை, தாய், தந்தை, குரு முதலியோரை வழிபடல் ஆகிய பணிகள். இவை எச்சமயத்தவர்க்கும் பொதுவே.

இந்த வகையில் பொது நோக்காக சிவன் சகல உயிர்கள் மாட்டும் பேதமின்றி அருள் செய்தாலும், சிறப்பு வகையில் தம்மை வழிபடுபவர்கள் (சைவர்கள்) மாட்டுச் சிறப்பு நாட்டம் செலுத்துகின்றான். அந்தப் பெரும் கருணை காரணமாக, நல் மாணாக்கர்களை நல்லாசான் தான் அடித்து நெறிப்படுத்துவது போல், (பிறதேசத்தவர் ஆகா! ஓகோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று வாழ) சைவர்களாகிய எம்மை மட்டும் பலவாறும் துன்புறுத்துகின்றனர். அது அவரது மறக்கருணை. அதாவது அடித்துத் திருத்துதல் என்ற அன்பு நெறி. ஏன்? நாம் அவன் வீட்டுக்காரர். உட்சமயத்தவர். அகச் சமயத்துள்ளும் சிறப்பு மிக்க சைவர்.

ஆகவே, மானிடராய் பிறந்து உழன்று மானிட இயல்புகட்கு உட்பட்டவர்களைத் தலைவர் என அவர்களையே ஏற்று எண்ணாது பிறவா, இறவா யாக்கைப் பெற்றியோனாய சிவனே – பதி என ஏற்று அவனையே எண்ணும் நம்மவர்களுக்கு அவன் சில சிறப்பான கடமைகளை நெறிப்படுத்தியுள்ளான்.

அவற்றுள் சில: –

1. வேதாகமங்களை (தமிழில் அவை – திருக்குறள், திருமந்திரம், ஏனைத் திருமுறைகள், புராண இதிகாசங்கள், சைவ சித்தாந்த நூல்கள்) அறிந்து போற்றி அதற்கேற்ப ஒழுகல்.
2. "வடமொழியும் செந்தமிழும் ஆயினாகாண்" என்றும், "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறை விளங்க" என்றும் தமிழ் வேதங்கள் பறைசாற்றி ஆரிய – திராவிடச் சமநிலையை உணர்த்தியுள்ளதைப் பயின்று ஒழுகல். சைவர் யாவரும் சிவ சம்பந்தத்தினர் என்பதால் அன்பு நெறியால் எம்மிடையே பேதமின்றி வாழ்தல்.
3. ஆசாரமான வாழ்க்கை முறையை மேற்கொள்ளல்.
4. நம்மவரை வழிப்படுத்திய புராண படன சம்பிரதாயத்தை மீண்டும் நிலை நிறுத்தல் என்று ஒருவாறு கூறலாம்.

நாவலர் வாயிலாக இவற்றை வகைப்படுத்துவதாயின் சைவர்களுக்குரிய சிறப்பிலக்கணம: –

i. புறத்திலக்கணம் ii. உடலிலக்கணம் iii. அகத்திலக்கணம்

<u>புறத்திலக்கணம் பத்து</u> : – வீபூதி, உருத்திராஷம் முதலான சிவசின்னங்களை அணிதல், குருவைத் தரிசித்தல், சிவனைத் தோத்திரம் செய்தல், சிவநாமங்களை உச்சரித்தல், சிவனைப் பூசித்தல், சிவதர்மங்களைச் செய்தல், சிவபுராணம் கேட்டல், சிவலிங்கத்தைத் தரிசித்தல், சிவனடியார்களிடத்து மட்டும் போசனம் செய்தல், அவர்களுக்கு போசனம் கொடுத்தல் என்பவை.

<u>உடலிலக்கணம் பத்து</u> : – சிவப்பெருமையைப் பேசும்போது கண்டம் விம்முதல், அதனைச் சிந்தித்து மகிழும்போது நாத்துடிக்க எழும்பாமை, நகைதுடித்தல், சரீரம் புழுங்குதல், உரோமம் சிலிர்த்தல், வேர்த்தல், தம்வசமின்றி தாம் பெயராமை, ஆனந்தக் கண்ணீர் சொரிதல், வாய்விட்டு அழுதல், பரவசமாய்த் தன்னை மறத்தல் என்பவை.

<u>அகத்திலக்கணம் மூன்று</u> : – பஞ்சாட்சரத்தை மானதமாகச் செபித்தல், மானத பூசை, சிவனைத் தன்னோடு பிரிவறக் காண்டல்.

இவற்றுட் சிவபுராணங்கேட்டல் ஏனைச் சிறப்பிலக்கணங்களையும் ஏனைப் பொது இலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாய் நிற்பது. வீபூதி அணிதல் முதலாம் புண்ணியங்களையும் அதன் பலனாம் இன்பத்தையும், கொலை முதலாம் பாவங்களையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவற்றின் பலனாய துன்பத்தையும் சிவபுராணம் அறிவிக்கின்றது. ஆகவே சிவபுராணத்தைப் பூசித்து வாசித்துப் பொருள் சொல்லிக் கேட்டிருத்தல் புண்ணியமாம்.

**வெளியீட்டுப் பின்னணி**: – மேற்படியாகக் கூறிய வகையில் புலம் பெயர்ந்தாலும் எமது சுயதர்மமாகிய சைவ தர்ம நிலை பெயராது இருத்தல் அவசியம் என்பதை உணர்த்த உணர்ந்தால் எழுந்த சொல்லாக்கமே இச்சிறு ஏடு. நீண்டநாட் திட்டமிட்டு உயர் பாண்டத்தியத்துடன் இது வரையப்படவில்லை. மேற்படியாய பின்னணியில் உணர்வு மேலிட நீர்கொழும்பு சித்தி விநாயகப் பெருமானின் இளவலின் புன்னகை முறுவலால் உணர்த்தப் பூரித்துப் பூப்பதே இச்சிறு மல்லிகை. தேவரும் சூக்கும் உடலோடு வந்து நின்று கேட்டு மகிழும் தனித்தன்மை வாய்ந்தது புராணபடனம்.

இந்நூலிற் கூறப்பட்ட 'கந்த புராணக் கரு' என்பதை மட்டும் ஏட்டுப் பிரதியாக அடியார்களுக்கு வழங்க உத்தேசித்த போது திருவாளர். சொக்கநாதன் வேறும் சில விடயங்கள் சேர்த்து நூலாக்குவோம் என்று கூறினார். அவர் கூற்று விநாயகர் கூற்றாக முன்னரும் அமைந்து "சிவாக்கினியும் சிவாச்சாரியாரும்" என்ற நூல் கடந்த ஆடியில் வெளிவந்தது யாவரும் அறிந்ததே. அந்நூல் போன்று இதுவும் குறுகிய நாள் முயற்சியின் வெளிப்பாடாகையால் பொருள் நூல் கற்றோர் நூலிலக்கணங்களின் முழுச் செறிவையும் இதில் காணாமைக்கு மன்னிக்க வேண்டுகின்றேன்.

மேலும் **நன்றியுரையாக** சிலவரிகள். இத்தகு நூல்களை வெளியீடும்போது விஞ்ஞான நெறியிற் சென்ற என்னை மெய்ஞானத்திற்கு இழுத்து உண்மை வழிகாட்டிய பெரியோர் வரிசை நீண்டது. முக்கியமாக ஏழாலைப் பண்டிதர் திரு. மு கந்தையா, பன்னாலைச் சித்தாந்தி திரு. சங்கரப்பிள்ளை, வீழிச்சிட்டி பண்டிதர் திரு. சங்கரப்பிள்ளை என்போர் குறிப்பிடத்தக்கவர்களாவர். நூல்களிற் கற்ற, ஓதிய மெய்ஞ்ஞான விடயங்களை நடைமுறையிற் கோயிற் தொண்டு, கிரியைகளுக்கூடாக உணர்த்தியவரும் "நூலுணர்வு" உணராது, 'கற்றோர்க்குத் தாம்வரம்பாகி' என்னை ஆன்மீக நெறிக்கிட்டுச் சென்றவருமாய ஏழாலை வட பத்திரகாளி கோயிற் பூசகர் மறைந்த திரு. பொன்னுத்துரை அவர்கள் நினைவில் அகலாதவர். இடம்பெயர்ந்து, மனம் தளர்வுற்ற நிலையில் அவர் என் கனவிற் தோன்றி ஆலயமொன்றில் திருமுறைகளை என் கையில் வைத்து 'போ – படி' என்றதன் விளைவே இச் செயற்பாடாம்.

முதன்முதலாக உரையோடு கூடிய கந்தபுராண படனம் நீர்கொழும்பில் நடைபெறுகையில் – கந்தசஷ்டி நாளில் இந்நூல் வெளியிடுவதும் இறையருள் காரணமே என்று நினைத்து சுப்பிரமணியப் பெருமானுடன் கோயில் கொண்ட சித்தி விநாயகருக்கு வணக்கம் செலுத்துகிறேன். இத்தோடு முன்னர் போல இம்முறையும் குறுகிய காலத்தில் மிகச் சிறப்பாக அச்சிட்ட ஓட்டோ அச்சக உரிமையாளர் ஒரு சைவ அபிமானி அவர் கைப்பட இது வெளிவருவது சிறப்பு. அவருக்கும் ஏனையோர்க்கும் நன்றிகள் உரித்தாகுக.

*வணக்கம்.*

**செ. சொர்ணலிங்கம் (B. Sc.)**
ஏழாலை, தெல்லிப்பழை.

நீர்கொழும்பு.
03.11.1997.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
கணபதி துணை

# கந்த சஷ்டி விரதமும் கந்த புராணக் கருவும்

## 1. நாவலரின் புராண படன பஞ்சரத்தினம்

(அ) சைவர்கள், பல சமயத்தாருக்கும் பொது வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை முன்னே வழுவாது தழுவிக் கொண்டே, பின்பு தங்களுக்குச் சிறப்பு வகையால் வேண்டப்படும் இலக்கணங்களை உடையவர்களாய் ஒழுகல் வேண்டும்.

(ஆ) சிறப்பு வகையாகிய இருபத்து மூன்று இலக்கணங்களுள் (இவற்றை சிவபுராணபடன விதியிற் காண்க) ஒன்றாகிய சிவபுராணங் கேட்டல், தான் ஓரிலக்கணமாய் நிற்றலன்றித் தன்னையும் தன்னை ஒழிந்த சிறப்பிலக்கணங்களையும் வருவித்தற்குக் கருவியாய் நிற்றலுடையது.

(இ) சிவபுராணம் படித்துப் பொருள் சொல்லுவதற்கு உரிய இடங்களாவன: தேவாலயம், திருமடம், நதிக்கரை, குளக்கரை, திருநந்தவனம், யாகசாலை முதலிய சுத்தஸ்தானங்களாம்.

(ஈ) நாடோறும் புராணந் தொடங்கும் போதும் முடிக்கும் போதும் காப்புச் சொல்லல் வேண்டும். காப்புக்கு முன்னும் பின்னும் “திருச்சிற்றம்பலம்” என்று உச்சரித்தல் வேண்டும். காப்புச் சொல்லும் போது யாவரும் கும்பிட்டுக் கொண்டிருத்தல் வேண்டும்.

(உ) புராணம் வாசிப்பவர் சபையார் யாவரும் கேட்கும் பொருட்டுத் தெளிவுபெற வாசித்தல் வேண்டும். வாசிக்கும் காலத்துக்கும் எடுத்துக் கொண்ட விஷயத்தின் குணத்திற்கும் ஏற்ற இராகத்தில் வாசித்தல் வேண்டும். எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படல் வேண்டும். இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையா இடங்களில் விரிவாகவும் பொருள் சொல்லல் வேண்டும்.

மேற்குறித்த நாவலர் விதிகளுடன் சிவபுராணபடன விதி என்ற அவர் நூல் மேலும் வழிகாட்டியாயுள்ளது.

பொதுவில் புராணம் படிப்பவர், கேட்பவர் இருசாராரும் உள்ளும் புறமும் தூயதாய், தோய்த்துலர்ந்த ஆடை உடுத்து, தீட்சை கேட்டோர் சந்தியாவந்தனம் செய்து, ஆரவாரமின்றி, பயபக்தியுடன், விரதமனுட்டித்துப் புராண படனத்தில் பங்கு கொள்ளல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரோடை போல் எதுவித குழப்பமுமின்றி இயல்பாக இது நடைபெற வேண்டும். தகுதி அனுபவம் உள்ளோரையும் - அத்தகு பிற ஊரவரையும் புராண படனத்தில் ஈடுபடுத்தும் (தலைமையற்ற - புரிந்துணர்வான) நடைமுறை இருத்தல் அவசியம். ஆண்டவன் முன்னிலையில் சந்நிதி விரோதமின்றி, சுமுகமாகத் தகுதி உள்ளவரிடம் விட்டுக் கொடுத்து- அவர் படிப்பை, பொருளைக் கேட்டுணர்ந்து பயிலும் பண்பு பிரதானமானது.

இறைகருணை இருப்பின் அந்தந்த உணர்ச்சியுடன் (நவரசங்களும் புராணத்தில் உள) படிப்பவருக்குத் தானாகவே பொருத்தமான இராகங்கள் அவ்வப்போது வரும். பொதுவில் தோடி இராகத்தில் படித்தலுண்டு. வீரம்- அடானா, மோகனம்; ஆண்மை- சங்கராபரணம்; சோகபக்தி- பைரவி; பக்தி உணர்ச்சி- கேதாரகௌளை; ஆனந்தம்- ஆனந்தபைரவி, கமாஸ்; புலம்பல்- சகானா, முகாரி போன்றவை பொருத்தமானவை. நீண்ட நேரம் களைப்பின்றிப் படிக்க (கதை உணர்ச்சிகள் மாறாது சீரானதாயின்) ஆரபி, கரகரப்பிரியா போன்றவையும் உகந்தவை. காம்போதி இலகுவில் சபையைக் கவரும். இராக அனுபவங்களற்றவர்கள் இயன்றவற்றை ஏனையோரைப் பக்தி சிரத்தையுடன் பின்பற்றுதல் அவசியம். அத்தகையோர் காலகதியில் முன்னேற்றம் காண்பர்.

மேலும் இடையில் வருதல், இடையில் போதல், கதைத்தல் என்பன ஆகா. புராணபடணம் செய்யும் போது அதில் இறைசன்னித்தியம் இருப்பதால் அப்போது ஏனைய வழிபாட்டு நிகழ்ச்சிகளாய அர்ச்சனை, வலம்வரல், தனிமையாயிருந்து ஏதோ ஒன்றைப் படித்தல் என்பனவும் ஆகா. இறைவன் பொருட் பிரபஞ்சத்தில் இருப்பதுபோல் சப்த (மந்திர, தோத்திர) பிரபஞ்சத்திலும் வீற்றிருப்பவன் என்பதை மறத்தலாகாது. ஓசை ஒலியெல்லாம் ஆனாய் நீயே- அப்பர்.

## கந்த சஷ்டி விரதமுறை

<u>பொதுவில் விரதமனுட்டிப்பவர்கள் செய்ய வேண்டியது:-</u> காம, குரோத, மோக ஆதியாய தீக்குணங்களின்றி, பிரம்ம மூர்த்தமாய அதிகாலையில் எழுந்து புண்ணிய தீர்த்தக்கரையில் (வீடெனில் சுத்த நீரில் கையால் ஓம் என்று நீரில் எழுதி விபூதி தெளித்து புனிதமாக்கி) விபூதி, கோமயம் (சாணி), வில்வத்தடிமண், தருப்பை, எள் என்பவற்றைத் தலையில் வைத்து (இயலுமாயின் கையிலே பவித்திரம் சேர்த்து நீரைப் பார்த்து சங்கற்பம் சொல்லி) கங்கை முதலாம் சப்த நதிகளை நினைந்து நீராட வேண்டும். நீராடிய பின் தோய்த்துலர்ந்த இரண்டுடை உடுத்தல் வேண்டும். ("ஆடையோரிரண்டு தாங்கி"- கந்தபுராணம்: "இரண்டுடை உடீஇ"- திருமுருகு.) விரத நோக்கையும் உறுதியையும் இறைவனிடம் தெரிவித்தல்- சங்கல்பம் ஆகும். உறுதிகுலையாமற் பொருட்டு இடையில் தீர்த்தம் (அருட்பிரசாதம்) அருந்தலாகாது. அதன்பின் தியானம், செபம், பூசை, ஆலயதரிசனம், பிரதட்சணம், புராண சிரவணம் (கேட்டல்) முதலியவற்றுடன் ஆலயக் கிரியைகளுக்கும் பொருள் உதவி செய்தல் வேண்டும். போசனம் அடியார் சிலருடன் சேர்த்து செய்தல் வேண்டும். நித்திரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனிமையாக மெழுகப்பட்ட (சீமெந்து ஆயின் மஞ்சள் நீராற் துடைத்த) தரையில் இயலுமாயின் தர்ப்பை மீது சிவ சிந்தனையுடன் துயில வேண்டும்.

உபவாச தினத்துக்கு முன்னாள் அந்தியில் ஒரு வேளை உணவுண்டு உபவாசதினம் உணவின்றி மறுநாட்காலை சந்தியா வந்தனம் முடித்து, மாகேசுரபூசை செய்து, சுற்றத்தவருடன் பாரணம் (உபவாசத்தின் பின் போசனம்) செய்ய வேண்டும். அதன் பின் நித்திரை செய்யாது அவசிய கருமமிருப்பின் அவற்றை சிவ நினைவுடன் முடித்து புராண படணம், தோத்திரம் முதலாம் சிவபுண்ணியங்களில் பொழுதைக் கழிக்கவேண்டும்.

நாவலர் வாக்கு:-"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்".

விரதம் பிராணனை வலுவாக்கி, சிந்தனையைத் தூயதாக்கி, பற்றறுக்க உதவி, உள்ளத்தை ஒருநிலைப்படுத்தி, உள்ளொளியாம் சிவசோதியில் ஆன்மாவை நிறுத்தி ஞான உணர்வை எமக்குத் தருகிறது. சரியை, கிரியை, யோகங்களால் முடிவான இறை ஞானத்தைப் பெறுதலே எமது இலட்சியமாகும்.

உடல்ரீதியாக நோக்கின் விரதம் நோயறுத்து, அழுக்ககற்றி, ஓய்வுகொடுத்து புத்துணர்வைத் தருதலால் உடம்பு வளர்ந்து உயிர் வளர உதவும். உயிர் வளர்த்து அதை உணர்ந்து சிவ உணர்வில் ஒன்றாதலே முடிந்த முடிவாம்.

## சிறப்பாக கந்த சஷ்டி விரதத்தின் போது கவனிக்கப்பட வேண்டியவை

இது ஐப்பசி மாத அமாவாசையை அடுத்து வரும் 6 நாட்களில் கடைப்பிடிக்கப்படுவது. மேற்குறித்த பொதுவிதிகளுடன் சிறிதளவு நீர் (ஆசமன நீர் உகந்தது) அருந்தி 6 நாளும் உபவாசமிருந்து ஏழாம் நாள் பாரணம் செய்வது உத்தம விரதம்.

மத்திமமாகக் கூறுவதாயின் முதல் ஐந்து நாளும் ஒரு நேர பழவகையோ அல்லது தூய்தாக (சுவாமி அறையில்) ஆக்கிய அன்ன அமுதையோ நைவேதித்து உண்டு சட்டியாகிய 6ம் நாள் பூரண உபவாசம் இருந்து 7ம் நாட் காலை அடியாருடன் பாரணம் செய்யலாம். மிளகுடன் நீரருந்துபவருமுண்டு.

இந்த ஆறு நாட்களும் இருவகையிற் சிறப்பாகின்றன. ஒன்று முருகன் அவதாரம், மற்றது சூரசம்காரம் - பிரதமையில் சிவனின் நெற்றிக் கண்ணில் இருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெறித்த ஆறு பொறிகளும் சரவணப் பொய்கையில் ஆறுருக்களாகி, கிருத்திகை முதலறுவரும் பாலூட்ட வளர்ந்து, உமையம்மை அணைக்க ஆறு திருமுகமும் பன்னிரு திருக்கைகளுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாள் கந்த சஷ்டிநாள். இந்நாளிலேயே சூரசங்காரம் நடைபெற்றது.

இவ்விரதம் தேவர்கள், முனிவர்களாலும் நோற்கப்பட்டது. விரத நாட்களில் காலை- மத்தியானம்- அந்தி நேரங்களில் தீட்சை கேட்டோர் சந்தியாவந்தனம் செய்தல் பிரதானம். இரவில் தம்பம் (தறி- லிங்கஉரு), விம்பம் - (விக்கிரகம்), கும்பம் என்பனவற்றில் முருகனை அழைத்து பூசை செய்தல் வேண்டும்.

*"முந்திய வைகலாதி மூவிரு நாளுங் காலை*
*யந்தமில் புனலின் மூழ்கி யாடையோ ரிரண்டு தாங்கிச்*
*சந்தியிற் கடன்கள் செய்து தம்பவிம் பங்கும் பத்திற்*
*கந்தனை முறையே பூசை புரிந்தனர் கங்குற் போதில்".*

(கங்குல்- இரா)- கந்தபுராணம் (முனிவர்கள் பூசை)

*"நிறைதரு கட்டி கூட்டி நெய்யினாற் சமைக்கப்பட்ட*
*குறைதவிர் மோத கத்தைக் குமரநாயகற் கருத்தப்*
*பிறவுள விதியுஞ் செய்து பிரான்றிருப் புகழ்வி னாவி*
*யுறுபுனல் சிறிது மாந்தி யுபவசித் திருந்தார் மாதோ.*

(கட்டி- வெல்லக்கட்டி: அருத்தி- நைவேத்தியம் செய்து (படைத்து), பிறவுளவிதி- சோடச (16) உபசாரங்கள் (ஆலயங்களில் செய்வதுண்டு) திருபுகழ்வினாவி- புராணபடணம் கேட்டு: மாந்தி- அருந்தி)

*ஆரணமுனிவர் வானோ ரங்கதன் மற்றை வைகல்*
*சீரணி முருக வேட்குச் சிறப்போடு பூசையாற்றிப்*
*பாரணம் விதியிற் செய்தார் பயிற்றுமிவ் விரதந் தன்னாற்*
*றாரணி யவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார்.*

(அங்கு அதன் மற்றைவைகல்- அந்தச் சட்டி தினத்திற்கு அடுத்த தினமாகிய சப்தமியில்: அவுணர் கொண்ட தம்பதத் தலைமை பெற்றார். அசுரர்கள் தம்மிடமிருந்து கவர்ந்து கொண்ட தத்தம் பதத்தின் தலைமையை மீண்டும் பெற்றார்கள்)

(இவை வசிட்ட முனிவர் உபதேசம் செய்ய முசுகுந்தச் சக்கரவாத்தி கேட்டவை- கந்தபுராணம்)

இவ் விரதம் இலட்சிய நோக்குக்கேற்ப 6 அல்லது 12 வருடங்கள் பிடிக்கப்படலாம். சங்கற்பமின்றி மத்திமமாக வருடந்தோறும் பிடிப்ப வருமுண்டு. யாவும் அன்பின் வழித்தே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### *3.கந்தபுராணக் கரு*

சிவனுடைய பரத்துவத்தை அதாவது உயர்வான மேன்மையை உணர்த்துவதே கந்தபுராணத்தின் சாரம். அது சிவனுடைய திருமகனாய சுப்பிரமணியப் பெருமான் வாயிலாக உணர்த்தப்படுகின்றது.

சிவ பரத்துவத்தை உணர்த்தும் வடமொழிச் சிவரகசிய காண்டத்தின் ஏழு காண்டங்களில் முதல் ஆறும் கந்தபுராணம் என்ற பெயரில் கச்சியப்ப சிவாச்சாரியரால் தமிழில் அருளப்பட்டன. இதில் 6ம் காண்டமாகிய தக்ஷ (தக்க) காண்டத்தின் முதல் 32 பாடல்களும் தெவிட்டாத சுவையுடன் சிவமேன்மையைப் புகழ்கின்றன. அவை வினாவிடையாக (தக்கனுக்கும்- பிரம்மாவுக்குமிடையில்) அமைகின்றன. சிவஞான போத முதற் சூத்திர விரிவாக அவை அமைகின்றன.

அவன் என்றும் அவள் என்றும் அது என்றும் உயர்திணை அ்றிணையாகிய பிரபஞ்சத்தில் உள்ள எல்லாம் சிருட்டி (படைக்க)ப்பட்டும் திதி (காக்க)ப்பட்டும் சங்கார (அழிக்க)ப்பட்டும் வருகின்ற ஏது (காரணம்) வினாலே, அவை தாமே தம்மைத் தோற்றுவித்து காப்பித்து அழிப்பிக்கும் தகுதி இலாமையினால், ஒரு ஒப்பற்ற தலைவனால் தோற்றுவிக்கப் பட்டு நின்று (சிலகால் நிலைத்து) ஒடுங்கி மலத்தினால் திரும்பவும் சிருட்டிப்படும். இவ்வுலகத்திற்கு கர்த்தா அந்தத்தில் (முடிவில்) மகாசங்காரமெனும் தொழிலைச் செய்யும் முத்தொழில் வல்லராவார். அவரே சிவனெனும் செம்பொருள்- வாக்கு மனாதீத கோசரப் பொருள்- சத்- சித்- ஆனந்த சொருபம்.

*"அவனவள் அதுவெனும் அவைமூ வினைமையின்*
*தோற்றிய திதியே ஒடுங்கி மலத் துளதாம்*
*அந்தம் ஆதி என்மனார் புலவர்"*

என்மனார் புலவர் என்பது ஞான நூல்களைக் குருவழியாக ஓதி உணர்ந்து, சுத்தாத்துவித சைவ சித்தாந்த முத்திபேற்றை விரும்பி நிற்கும் புலமை பெற்றவர்கள். இறைவனின் இயல்பை இவ்வாறுரைக்கின்றனர் என்பதாம்.

*"யாதொரு பொருளையாவ ரிறைஞ்சினு மதுபோய் முக்க*
*ணாதியை யடையு மம்மா வங்கது போலத் தொல்லை*
*வேதம துரைக்க நின்ற வியன்புக ழுணைத்து மேலா*
*நாதனை யணுகு மெல்லா நதிகளுங் கடல்சென் றென்ன".*

(இறைஞ்சினும் - வேண்டினும்; வாங்கது போல - ஆஸ்டு அதுபோல)

இனி சிவனை மட்டுமன்றி சிவபூசை செய்து பேறு பெற்ற அடியவரை அவ்வகையில் உணர்ந்து போற்றினாலும் முத்திப் பேற்றுக்கு வேண்டிய ஏனைப் பேறுகளைப் பெறலாம். இது அரச கட்டளையை மந்திரிகள் நிறைவேற்றலை ஒப்பதாம்.

*"கானுறு புலித்தோலாடைக் கண்ணுதற் கடவுட் கன்ப*
*ரானவ ரென்று மன்னாற் கடித்தொழில் புரிந்து வாழும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வானவ ரென்று மெம்மை வழுதினக்கருள்வோ மல்லா*
*வேனையர் தம்மைத் தெவ்வேன் றெண்ணியே யிருத்து நாமே".*

"ஏனையா......தாமே" என்பதன் பொருள் எம்மைச் சிவனடியார் என்னாது தலைவர் என்று வீண்புகழ்ச்சி செய்பவரை ஏறெடுத்தும் பார்க்கோம் என்று பிரம விட்டுணுக்கள் கூறுகின்றனர்.

சிவ நிந்தனை என்பது மன்னிக்கப்பட முடியாதவொரு குற்றமாகும். சிவனை அவமதித்தவர்கள் சிவனடியார்களால் நிட்சயம் தண்டிக்கப்படுவார்கள். ஒரு நாட்டை ஆளும் மன்னனை நிந்தித்தவர் தண்டனை பெறுவது நாமறிந்ததே. ஆதலின் தேவாதிதேவன்- மகாதேவன் ஆக- மகா ஈஸ்வரானாகவுள்ள சிவனை நிந்தித்தவர் தப்பவே முடியாது.

இந்த உயர் தத்துவ அடிப்படையில் தான் கந்தபுராணச் செய்தி அமைகின்றது. அதாவது உயர்வான தவத்தின் பேறாக சிவனையே மருமகனாகப் பெறும் வாய்ப்புப் பெற்ற பிரமாவின் புதல்வனாய தக்கன் என்பவன் நன்றிகெட்டு வரம் தந்த சிவனையே அவமதிக்க முற்படுகின்றான்.

இவ்வகையில் தக்கன் தன் தந்தையாகிய பிரமதேவர் தொடக்கிய யாகத்திற்குச் சிவனை யாகத் தலைவனாக அதாவது முதல் அவிப்பாகத்திற்குரியவராகக் கொள்ளாது ஏனை 2ம் படியிலுள்ள தேவர்களை உயர்த்தி விஷ்னுவுக்கு அப் பதவியைக் கொடுத்து யாகத்தை ஆற்றுகின்றான். இத்தகு பிழைகளை நாமும் விடுவதுண்டு. உயர்ந்தோரை உரிய இடத்தில் வைத்துப் போற்ற வேண்டும். தக்கனுடைய இந்த மன்னிக்க முடியாத சிவநிந்தனையையும் அதன் பாதூர விளைவையும் உணர்ந்த நாரதர் முதலாம் முனிவர் சிலரும் பிரணவமும் அவனுக்கு உபதேசம் செய்து சிவனையே முன்னிலைப்படுத்தி யாகத்தைத் தொடருமாறு வற்புறுத்துகின்றனர். உமையும் தன் தந்தையின் பிடிவாதப் போக்கினால் வரும் தீவினைவை உணர்ந்து தந்தையை மனம்மாற்ற முயற்சிக்கிறாள். எதுவும் பலன் அளிக்கவில்லை. அவனின் ஆணவம் தன் வழியிலேயே அதிகார வெறியாய் யாகத்தை விஷ்ணு தலைமையில் நடாத்துகின்றது.

*"நன்றுனக்கு நல்கினம்*
*நன்நெறி நிற்றியென்னின்*
*நிலைக்கும் இச்சீர்"*

என்பது சிவன் தக்கனுக்கு வரத்தோடு சேர்த்துக் கொடுத்த கண்டிப்பான நிபந்தனை. நன்னெறி - சிவனெறி. அது யாவும் சிவமே என்ற உள்ளுணர்வில் அவன் தந்த பிட்சையை அவன் மறக்காது புசிக்கும் வழி.

அவன் நீநெறியாகிய சிவநிந்தனையால் தொடக்கிய வேள்வி வீரபத்திரரால் துவம்சம் செய்யப்படுகிறது.

தமது பதவி- சுகபோக இச்சைகளுக்காக அதில் பங்குகொண்ட தேவர்களுக்கு இட்ட சாபத்தால் அவர்கள் சூரபன்மன் என்ற அசுர தலைவனாற் துன்புறுத்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றனர். சூரபன்மன் ஏனைத் தம்பியருடன் காசிப முனிவருக்கும்- மாயைக்கும் பிறந்தவன். அவன் தன் உடலையே யாகத்திற்கு ஆவியாக்கி அதிஉயர்வான தியாகம் செய்து சிவவரம் பெற்றவன். 1008 பிருதிவி அண்டங்களை 108 யுகம் காயமதழியாது ஆண்டு தேவர்களுக்குத் துன்பம் செய்தவன். தேவர் துன்பமடையும் விதியைக் கச்சியப்பர் திருமால் வாயிலாகக் கூறுகின்றார்:-

*"ஊழ்வினை நெறியால் முன்னம் ஒரு பெருவேள்வியாற்றித்*
*தாழ்வினை அடைந்த தக்கன் தற்புடையிருந்தோர் தம்பாற்*
*சூழ்வினை எச்சமுற்றும் அருத்தியே தொலைத்து*
*வாழ்வினை அருள நாதன் மனத்திடை நினைந்தானன்றே"*

"தாழ்வினை.............தொலைத்து" என்ற வரிகள் நாமே நமக்கு கெடுவிதியைச் தீங்கு செய்வோருடன் சேர்ந்து ஏற்படுத்துவதையும் அதை அனுபவித்து தொலைப்பிக்கவே இறைவன் வருத்துகிறான் என்ற சைவ நெறியையும் உணர்த்துகிறது. ஏகப்பட்ட பல்வினைகளை முற்பிறப்பில் ஆற்றி அதன் ஒரு பகுதியாகிய பிரார்த்த பலன்படி இந்த தநு, கரண, புவன, போகங்களைப் பெற்று மீண்டும் உய்யும் உபாயம் தெரியாமல் பாசவலைப்பட்டு ஏறுவினை என்ற சஞ்சித வினையை ஆற்றுகின்றோம்.

சிவ சிந்தனையின்றி ஆற்றும் எவ்வினையும் நமக்கு மேலும் வினைத்தொகையைக் கூட்டுகின்றது. அதேவேளை சிவசிந்தனை (சிவோகம் பாவனை) யோடு ஆற்றும் கருமங்கள் உலக நடைக்கு ஒவ்வாதிருந்தாலும் கூட அது நன்மையையே அளிக்கின்றது.

*"அரனடிக் கன்பர் செய்யும் பாவமும் அறம தாகும்*
*பரனடிக் கன்பில்லாதார் புண்ணியம் பாவமாகும்*
*வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி தீமையாகி*
*நாரினிற் பாலன் செய்த பாதகம் நன்மை யாய்த்தே"*

என்பது சித்தியார் கூற்று. நரரினிற் பாலன் என்பது தாதையைத் தாளற வீசிய சண்டி. அவன் சிவபூசைக்குக் குந்தகம் செய்த தந்தையைத் தடிந்து சண்டீஸ்வரன் என்ற "வைராக்கிய பக்தர் தலைவன்" என்ற பதவி பெற்றான்.

இவற்றிலிருந்து மிக நுட்பமான யதார்த்தமான உண்மை புலப்படுகின்றது. சமூகக் கண்ணோட்டத்தை, பேர் புகழை மட்டும் மறைமுக இலக்காக வைத்து சிவ அன்பைப் புறந்தள்ளி ஒகோ என்று பாராட்டும் படியானவாழ்வுகள் கண்முன்னேயே வீழ்ச்சியடைவதைப் பார்க்கின்றோம். அவரோடு கூட இருந்து ஆடிப்பாடிப் புகழ் சேர்த்தோரும் தண்டணையிலிருந்து தவறுவதில்லை. இது சிவரகசியம் உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

ததீசி முனிவர் வாயிலாக அனேக கதைகள் சிவ மேன்மையை உணர்த்த தக்ஷ (தக்க) காண்டத்தில் உள. தண்டணையை சிலர் உடனும் சிலர் முனிசாபமாக சந்ததியாகவும் பெறுதலுண்டு. அதி உத்தமராகிய பிராமணர்கள் சில சமயங்களில் உலக போக, புகழ் இச்சைகளில் வயப்பட்டு உழலுவதை ஏலவே ததீசி முனிவர் கூறியுள்ளார். தக்கன் புகழ்பாடி சிவனை அவமதித்து விஷ்ணுவை யாகத் தலைவனாக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழியில் அவர்க்கும் பங்குண்டு. அவன் கொடுத்த சுகபோகங்களைப் பெரிதென எண்ணியதால் பழிக்குள்ளாயினர்.

*"பேசரிய மறைகளெலாம் பராபரனீ யெனவணங்கிப் பெரிது போற்று*
*மீசனையு மன்பரையு நீற்றொடு கண் டிகையினையு மிகழ்ந்து நீவிர்*
*காசினியின் மறையவராம் யெந்நாளும் பிறந்திறந்து கதியுறாது*
*பாசமத னிடைப்பட்டு மறையுரையா நெறியதனிற் படுதிரென்றான்"*

ஆதலின் ஞானநூல் ஓதி சிவசம்பந்தமாய் வாழ்ந்து பழிதீர்த்தல் அவர் தம் கடன். இவ்வாறு தாம்தாம் செய்தவினை தாமே அனுபவிப்பார் என்றும், நன்றும் தீதும் பிறர்தரவாரா என்றும் உணர்ந்த தேவேந்திரன் கூற்றாக கச்சியப்பர் கூறுவதாவது:-

*"புன்செயலால் இவட் புகுந்திடும் செயல்*
*என்செயலால் வரும் இயற்கை அல்லது*
*பின் செயல் ஒன்றில்லை பிறர் செய்கின்றதும்*
*தன்செயல் என்பரால் சார்பின் மேலையோர்".*

"யாமே எமக்கு விதிவலியும்" என்று திருமுறைகளும்

"விதிநின்றது பிடர் பிடித்துந்த நின்றது" என்று கம்பராமயாணமும் கூறுகின்றன. ஆகவே கந்தபுராணச் செய்தியாக சிவநிந்தனை- சிவனடியார் நிந்தனை- சிவதோத்திர நிந்தனை என்பன நீங்காப்பழியாகி - விதியாகி எம்மைத் தண்டனைக்குள்ளாக்கும். அதற்காக எமது எதிரிகளை வலிவுடைதாக்கும்.

இன்று நாம் துன்பம் அனுபவிப்பதும், அன்று தேவர் துன்பம் அனுபவித்ததும் சிவநிந்தனை காரணமாகவே. இனி இதிலிருந்து பெறும் மீட்சியும் அச் சிவனாலேயே கிடைக்கப் பெறல் வேண்டும். இவ்வாறு தண்டித்து தேவர் போன்று எம்மை ஆட்கொண்டு நின்மதியான வாழ்வைச் சிவன் தருவான். அது அவன் மறக்கருணை என்கின்ற மாப்பெருங்கருணை. இதைத்தான் கச்சியப்பர் திருமால் கூற்றாகக் கூறுகின்றார்:-

*"சூரெனும் அவுணற் காற்றல் புரிந்ததும் சுரர்கள் யாரும்*
*சார்வரு திறத்தால் ஈசன் தவத்தருக் குணர்வுகாட்டி*
*ஆருயிர் எவைக்கும் இன்னல் ஆக்கிவாறும் தூக்கில்*
*பேரருள் முறையே யன்றிப் பிறிதொரு செயலுமின்றாம்".*

(தூக்கில் - ஆராயில்)

ஆகவே இப்பேரருள் முருகன் மூலமாகத் தேவர் சிறைமீட்டு அவரவர் பதமளித்ததுமன்றி சூரபன்மனுக்கும் அவனின் உயரிய தவப்பேறாகிய காயமதழியாது சேவலும் மயிலுமாகி என்றும் யாவரும் வணங்கப்பெறும் பேற்றையும் கொடுத்தது.

இவையே கந்தபுராணத்தில் நாமறியும் தத்துவார்த்தங்களின் சுருக்கமாகும்.

சுபம்.

**"சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல் போற்றி போற்றி"**

நீர்கொழும்பு — **செ. சொர்ணலிங்கம்.**
01. 11. 1997.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண காப்பு செய்யுட்கள்

திருச்சிற்றம்பலம்

1. திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

2. உச்சியின் மகுட மின்ன வொளிர்தர நுதலினோடை
வச்சிர மருப்பி னொற்றை மணிகொள்கிம் புரிவயங்க
மெய்ச் செவிக் கவரி தூங்க வேழமா முகங் கொண்டுற்ற
கச்சியின் விகட சக்ர கணபதிக் கன்பு செய்வாம்.

3. மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை போற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறுதோள் போற்றி காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி

### நூற்பயன்

4. இந்திரராகிப் பார்மே லின்பமுற்றினிது மேவி
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனிற் சேர்வ
ரந்தமில் அவுணர் தங்களடல் கெட முனிந்த செவ்வேற்
கந்தவேள் புராணந்தன்னைக் காதலித் தோதுவோரே.

### பிரம உபதேசம்

1. அவனருள் பெறாது முத்தியடைந்தன ரில்லை யல்லா
லவனரு ளின்றி வாழு மமரும் யாருமில்லை
யவனரு ளெய்தி னெய்தா வரும்பொரு ளில்லை யாணை
யவனல தின்றவ னில்லை யவனநீ யடைதி யென்றான்.

### கந்த புராண படிப்பினைகள்

2. தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன் உற்றால்
தூயவராகி மேலைத் தொல்கதி யடைவ ரென்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ அடுசமர் இந்நாட் செய்த
மாயையின் மகனு மன்றோ வரம்பிலா வருள் பெற்றுய்ந்தான்

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமால் முருகன் வரவின் எதிர்வு கூறல்

"முனிவருக் குணர்வு காட்டும் மோனத்தை நீக்கிப்
பனிவரை அணங்கை மேவிப் படைப்பயன் முற்றும் அன்னார்க்
கினியொரு குமரன் தோன்றில் சூர்கிளை யெனைத்தும் பொன்றும்
துணியுறும் உலகமெல்லாம் தொன்மை போலுய்ய் மாதோ"
(மோனம் - தவம், பனிவரை அணங்கு - உமை, பொன்றும் - அழியும்)

### காமனுக்கு உபதேசம்

"ஆராயினும் ஒருவர் அன்பின் தலைப்பட்டு
பேராதரத்தாற் பிறர்க் குதவி செய்வாரேற்
தீராத வெந்துயரிற் சேர்தலே மாய்தலினை
பாரார் புகழே பயனென்று கொள்வாரே"

### தக்கன் புதல்வருக்கு நாரதமுனி புகன்றவை

1. எத்தனை எத்தனை இன்பம் வேண்டுநாக்
கத்துணை அலக்கண் வந்தடையு மாங்கது
மெய்த்திறம் நீவிரும் விதியின் நிற்றிரேல்
கைத்துனு துயரெனும் கடலிற் சார்ந்திரால்"

2. "சுற்ற மதரனடித் தொண்டரல்லது
மற்றிலர் அவனடி மலர்களே யலாற்
பற்றிலர் சாலவும் இனிய பண்பினர்
குற்றம தகன்றதோர் கொள்கை மேவினார்"

3. "நேசமுற்றடைபவர் நினைப்பின் நீங்கரும்
ஆசறுத் தருள்புரி அறிவின் மேலையோர்
ஈசனைக் குறுகி எஞ்ஞான்றும் வாழ்பவர்
பேசுதற் கரியதோர் பெற்றி யெய்தினார்".

### சிவனே முத்தி தருபவன்

"பரசிவ னுணர்ச்சி யின்றிப் பல்லுயிர்த் தொகையு மென்றும்
வரவிய துயர்க்கீ றெய்தி வீடுபே றடையு மென்ற
லுருவமில் விசும்பிற் றோலை யுரித்துடுப் பதறகொப் பென்றே
பெருமறை யியம்பிற் றென்னிற் பின்னுமோர் சான்றுமுண்டோ.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திரன் முருகனிடம் அடைக்கலம் அடைதல்

1) *நண்ணினார்க் கினியா யோல*
*ஞானநா யகனே யோலம்*
*பண்ணவர்க் கிறையே யோலம்*
*பரஞ்சுடர் முதலே யோல*
*மெண்ணுதற் கரியா யோலம்*
*யாவையும் படைத்தா யோலங்*
*கண்ணுதற் பெருமானல்குங்*
*கடவுளே யோல மோலம்.*

(நண்ணினர்க்கு இனியாய் ஓலம் - பற்றுகளைத் துறந்து தேவரீரே எமக்கினியவர் என்று வந்து சேர்ந்தவர்கட்கு என்றும் இதம் செய்பவரே அபயம். பண்ணவர் - குருமார்)

2) *தேவர்க டேவே யோலஞ்*
*சிறந்தசிற் பரனே யோல*
*மேவலர்க் கிடியே யோலம்*
*வேற்படை விமலா வோலம்*
*பாவலர்க் கெளியா யோலம்*
*பன்னிரு புயத்தா யோல*
*மூவரு மாகி நின்ற*
*மூர்த்தியே யோல மோலம்.*

(சிறந்த சிற்பரனே ஓலம் - மகிமை மிக்க சூக்குமசித்தாயுள்ளவரே அபயம், மேவலர்க்கு இடியே ஓலம் - வேதசிவாகம ஒழுக்கத்தைத் தவிர்த்த பகைவராம் அசுரர்க்கு இடியேறு போன்றவரே அபயம், பாவலர்க்கு எளியாய் ஓலம் - நக்கீரனாதிய கவிவாணர்க்கு எறிவந்த பொருளே அபயம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளியீடு கிடைக்குமிடம்**

இ. ஆ. க. சொக்கநாதன்
132, கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

ஓட்டோ அச்சகம், 122, சென்றல் வீதி, கொழும்பு - 12.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org